Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 24 இதழ் - 12 டிசம்பர் 2011

தனிப் பிரதி ரூ. 8/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

❄ வரும் 2012–ம் ஆண்டிலும் திருமறை ஆசான் இதழை பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து பத்திரிக்கை நிறுத்தப்படும்.

❄ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.

❄ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை .................................... 1
2. ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது? .................................... 9
3. நிழலும், நிஜமும் .................................... 15
4. பெண்கள் பகுதி .................................... 19
5. சிறுவர் பகுதி .................................... 22
6. பொருத்தமான சுவிசேஷம் .................... 24
7. மகிழ்ச்சி .................................... 27
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை .................... 29


✦ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

✦ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

✦ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

✦ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.

✦ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 DECEMBER - 2011 Issue - 12

ஆசிரியர் உரை

## " நாம் பரலோகில் பிரவேசிப்பதற்கு... "

சில நேரங்களில் சில மனிதர்களிடம் நாம் பேசும் போது, தங்கள் வாழ்க்கையில் அவர்கள் பெற்று அனுபவிக்கும் மேன்மைக்கும், சிறப்புக்கும், உயர்வுக்கும் காரணம் இன்னார் தான் என்று சம்பந்தப்பட்டவர்களைக் குறிப்பிட்டு நெஞ்சு நெகிழ்ந்து சொல்லுவர். ஆம், நான் இன்றைக்கு இந்தளவு இருப்பதற்கு என் பெற்றோரின் தியாகம் தான் காரணமென்றும், நான் இந்தப் படிப்பை முடிப்பதற்கு என் மாமா தான் படாத பாடுபட்டார் என்றும், நான் இந்தத் தொழிலில் வெற்றியடைவதற்கு என் சித்தப்பா தான் இதன் நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொடுத்து வழிகாட்டினார் என்றும், நான் இந்தக் குடும்பத்தில் சம்பந்தம் வைப்பதற்கு இன்னார்தான் ஏற்பாடு செய்தார் என்றும் மிகுந்த நன்றியுணர்வோடு பெருமிதம் பொங்கக் கூறுவர். நான் இப்படிக் குறிப்பிடும் போது, நன்மைகளைப் பெற்ற எல்லோரிடமும் நீங்கள் சொல்லுவது போன்ற நன்றியுணர்வு கணப்படுவதில்லையே என்று ஒருவேளை நீங்கள் கூறலாம். ஆமாம், நீங்கள் சொல்லுவதும் கண்டிப்பாக உண்மைதான். ஆனால், நன்மைகளைப் பெற்ற எல்லோரும் நன்றி கெட்டவர்களல்ல என்பதும் உண்மை தானே. ஆனால், இப்படி அழிந்தும், முடிந்தும் போகும் நிலையில்லாத சரீர நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் போது, அதற்கு நன்றி காட்டி, நன்மைகளை நினைத்துப் பார்க்கும் மானிடம், ஆன்ம காரியங்களென்று வரும் போது, நன்றியுணர்வுக்குச் சுத்தமாகச் சமாதி கட்டி, உணர்வற்றவர்களாய் நடந்து கொள்வது மிகுந்த ஆச்சரியமாகவும், புரியாத புதிராகவும் உள்ளது.

இங்கே நான் இப்படிச் சுருக்கென்று எழுதுவதற்கான காரணம் வசனங்களின் அடிப்படையிலானது. எப்படியெனில், கிறிஸ்துவின் மூலமான ஆன்ம நன்மைகளை வாரிக் குவித்த எபிரெய கிறிஸ்தவர்கள், ஒரு கட்டத்தில் நன்றி கெட்டவர்களாய் நடக்க முற்பட்டபடியால், எபிரெய ஆசிரியர் தன்னுடைய நிருபத்தில் இவ்விதமாக எழுத நேர்ந்தது. "*ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்...*" என்று (எபி. 10:19, 20).

சரி, இப்படி எழுத வேண்டிய அவசியம் எபிரெயர் ஆசிரியருக்கு ஏன் வந்தது என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொள்ள இந்நூலின் பின்னணியை நமது வழக்கத்தின்படியாகப் பார்த்து விடுவோம்.

கிறிஸ்துவின் நற்செய்தியானது பக்தியுள்ள யூதர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட போது, மிகுந்த வாஞ்சையோடு ஏற்றுக் கொண்டு, யூதர்கள் என்ற தங்கள் பாரம்பரிய அடையாளத்தை அச்சமின்றித் துறந்து, கிறிஸ்தவர்கள் என்ற புது நாமத்தைத் தரித்துக் கொண்டார்கள். பிரகாசமாக்கப்பட்ட அந்த நாட்களில், கிறிஸ்தவர்கள் என்ற நாமத்தினிமித்தம் எதிர் வந்த உபத்திரவங்களைக் கூட சகித்துக் கொண்டார்கள் (எபி. 10:22). ஆனால், காலப்போக்கில் சக யூதர்களின் தொடர் தாக்குதலுக்குப் பயந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியாகத் தாங்கள் விட்டு வந்த யூத முறைமைகளுக்கே மீண்டும் திரும்ப எத்தனித்தனர். நித்திய அழிவை நிச்சயமாய் ஏற்படுத்தும் இவ்விபரீதப் போக்கை எப்படியாகிலும் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கில், ஆவியானவரின் துணையோடு எழுதப்பட்டது தான் எபிரெயர் நிருபம். இந்நூலின் ஒட்டுமொத்தப் பொருளே "மேலானது" என்பது தான். மேலானது என்று பொருள்படும் வார்த்தைகள் குறைந்தது 13 முறை இடம் பெற்றுள்ளது. மேலானதை விட்டு விட்டு கீழானதிற்கு ஏன் போக வேண்டுமென்பது தான் எபிரெயர் ஆசிரியர் இந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு முன்பாக எடுத்து வைக்கும் பலமான வாதம்.

ஆம், கிறிஸ்து தேவ தூதர்களைக் காட்டிலும் மேலானவர். எப்படியெனில், தேவ தூதர்கள் யாவரும் கிறிஸ்துவைத் தொழுது கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள் (எபி. 1:16). கிறிஸ்து மோசேயைக் காட்டிலும் மேலானவர். எப்படியெனில், மோசே

இவராலே உண்டாக்கப்பட்டவர் (எபி. 3:4). கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறை, ஆரோனின் ஆசாரியத்துவ முறையைக் காட்டிலும் மேலானது. எப்படியெனில், கிறிஸ்து ஒரே தரம் பலி யிடப்பட்டிருக்கிறார். மொத்தத்தில், நீங்கள் கிறிஸ்துவினி மித்தம் இழப்பதைக் காட்டிலும், அவராலே ஆதாயப்படுத்திக் கொள்வதே மிகவும் அதிகம் என்று தர்க்க ரீதியாக விளக்கி இதனடிப் படையில் கீழானதாகிய பழைய பிரமாணத்திற்குத் திரும்பிப் போகும் உங்கள் நினைப்புக்கு சாவு மணி அடித்து பூரணராகும் படி கடந்து போங்கள் என்று வலியுறுத்துகிறார் (எபி. 6:1).

நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் எபிரெயர் பத்தாம் அதிகாரமும் இக்கருத்தை ஒட்டியே உள்ளது. முதல் நான்கு வசனங்களில், பழைய பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தின் பெலவீனம் பகிரங்கப்படுத்தப்பட்டு, தொடர்ந்து 10-ம் அதிகாரம், 18-ம் வசனம் வரை இயேசு கிறிஸ்துவின் தியாக பலியின் வலிமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எபிரெய கிறிஸ்தவர்களுக்குப் பரிச்சயமான பழைய ஏற்பாட்டு முறைமைகளை, அவர்கள் புரிந்து கொள்ளும்படியான பாணியில் மிகவும் விபரமாய் விவாதித்து விட்டுத்தான், 19-ம் வசனத்தில், "ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு...." என்று ஆரம்பித்து, அப்படி நாம் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் எவைகளை யெல்லாம் செய்திருக்கிறார் என்ற ஒரு பட்டியலைக் கொடுக் கிறார். இப்பட்டியல் வெளிப்படுத்தும் செய்தி அப்பட்டமானது. ஆம், எபிரெயக் கிறிஸ்தவர்களே, நீங்களும், நானும் பரலோகம் செல்வதற்கு இயேசுவானவர் நடப்பித்த காரியங்களை மறந்து நன்றி கெட்டவர்களாய் இல்லாமல், ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்து நன்றியுடைய வர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று ஊக்கப்படுத்துவதோடு நிற்காமல், தேவையான அளவுக்கு எச்சரிப்பும் கொடுக்கிறார்.

எபிரெயக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, எங்குமுள்ள மானிடம் முழுவதும் பரலோகம் செல்வதற்கு, இயேசு ஆண்டவர் செய்த தியாகம் இப்பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது. அவை களில் சிலவற்றை நாம் இங்கே கவனிப்பது நல்லது. ஏனெனில், கிறிஸ்துவின் காரியங்களில் நம்பிக்கை கொண்டு வாழும் ஒருவனின் முடிவான இலக்கு பரலோகம். அந்தப் பரலோகம் நாம் செல்லுவதற்கு கிறிஸ்து என்ன செய்திருக்கிறார் என்பதை அறிவது நமக்கு மிகுந்த ஆன்மீக உத்வேகத்தைக் கொடுக்கும்.

**I. மாம்சமாகிய திரையின் வழியாய்ப் பிரவேசித்தார் (10:19)**

எபிரெய கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெய ஆசிரியர் இப்பகுதியில் எடுத்து வைக்கும் முதல் வாதம், அவர் மாம்சமாகிய திரையின் வழியாய்ப் பிரவேசித்தார் என்பது.

பொதுவாக, திரை என்பது ஒரு தடுப்பு. இரண்டு பகுதிகளைப் பிரிக்கும் ஒரு சாதனம். பழைய ஏற்பாட்டின் காலத்தில், தேவன் மலையின் மேல் மோசேக்குக் காட்டின மாதிரியின்படியாகக் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் முற்பகுதி, "பரிசுத்த ஸ்தலம்" என்றும் உட்பகுதி "மகா பரிசுத்த ஸ்தலம்" என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு பகுதிகளையும் ஒரு திரை தான் பிரித்தது (யாத். 26:33). இந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக பிரதான ஆசாரியன் மாத்திரம் வருடத்திற்கு ஒருமுறை தனக்காகவும், ஜனங்களுக்காகவும் பலி செலுத்தும்படி செல்லுவார் (எபி. 9:7; யாத். 30:10; லேவி. 6:14,150, பிரதான ஆசாரியன் இரத்தத்தோடு தான் உள்ளே பிரவேசிக்க வேண்டும். இரத்தமில்லாமல் உள்ளே பிரவேசிக்க முடியாது.

இப்படி மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கத் தடையாக இருந்த இந்தத் திரைச் சீலையானது. கொல்கொதா மலையில், கோரச் சிலுவையில், "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டு இயேசுவானவர் ஆவியை விட்டபோது, மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" (மத். 27:51). திரைச்சீலை இப்படிக் கிழிந்து பல உண்மைகளுக்கு உரமிட்டது. ஆம், (1) யூதர்களுக்கும், புறஜாதிகளுக்குமிடையேயான தடுப்பு திரைச்சீலை இரண்டாகக் கிழிந்ததின் மூலம் தகர்ந்து போனது. (2) தேவாலயத்துக் காரியங்கள் இதன் மூலம் முடிவுக்கு வந்தது. (3) அதுமாத்திரமல்ல, தேவன் யூதர்களோடு செய்து கொண்ட பழைய உடன்படிக்கையின் காரியங்களும் நிறைவுபெற்றது. இவைகளனைத்தும் இயேசுவின் மரணத்தில் நிறைவேறியது.

பழைய பிரமாணத்தின் கீழாக, பிரதான ஆசாரியன் ஒவ்வொரு பக்தியுள்ள யூதனுக்காகவும் வருடந்தோறும் திரைக்குள்ளாகப் போய் செய்த காரியத்தை, இயேசு தமது மரணத்தின் மூலம் ஒரே தரம் செய்து முடித்து விட்டார். அப்படியிருக்கும் போது, நீங்கள் அந்தப் பழைய முறைமைக்குத் திரும்ப எண்ணங் கொண்டு, நன்றியற்றவர்களாய் நடந்து கொள்ளுகிறீர்களென்று கேள்வி எழுப்புகிறார். இன்னும், இந்த எபிரெயர் 10-ம் அதிகாரத்தைத் தொடர்ந்து கவனித்தால் இவ்விதமாய் எச்சரிக்கிறார். "*சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதியை பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்*" என்கிறார் (எபி. 10:26,27).

அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கிறோம். நானும், நீங்களும் பரலோகம் செல்லுவதற்கு கிறிஸ்து நமக்கு செய்த எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்து, ஓர் நன்றியுள்ள வாழ்க்கையை எதிர்வரும் புதிய ஆண்டில் நடத்தத் தீர்மானிக்கிறோமா அல்லது

எபிரெயக் கிறிஸ்தவர்களைப் போல் நன்றி கெட்டவர்களாய் நடந்து, பெற்றுக்கொண்ட ஆன்ம நன்மைகளை மறந்து, விட்டு வந்த பழைய வழிக்குத் திரும்பிப் போகப் போகிறோமா? என்ன செய்யப் போகிறோம்? நாம் பரலோகம் செல்லுவதற்கு இயேசு தமது சரீரத்தையே ஒப்புக் கொடுத்திருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். அவருடைய சரீரம் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்தக் கோரக் காட்சியானது விவரிப்புக்கு அப்பாற்பட்டது. மகா பெரிய தியாகத்தை இயேசு நமக்காகச் செய்திருக்கிறார்.

ஆகையால், நாம் நன்றியுடைவர்களாய் நடந்து, எதிர்வரும் ஆண்டில் கிறிஸ்துவின் நற்செய்திக்கு நம்மை ஒப்புக் கொடுப்ப வர்களாகவும், அந்த நற்செய்தியின் உபதேசப்படி வாழ்கிறவர் களாகவும் இருக்கத் தீர்மானிப்போம்.

**II. புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார் (10:19).**

எபிரெய கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெயர் ஆசிரியர் இப்பகுதியில் எடுத்து வைக்கும் இரண்டாவது வாதம், "அவர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார்" என்பது.

நாம் பரலோகம் செல்லுவதற்கு மாம்சமாகிய திரையின் வழியாகப் பிரவேசித்த இயேசுவானவர் தொடர்ந்து செய்த காரியம், புதிதும் ஜீவனுமான மார்க்கம். இயேசுவானவர் மாம்ச மாகிய திரையின் வழியாகப் பிரவேசித்திருக்காவிட்டால் இன்றைக்கு கிறிஸ்துவின் மார்க்கம் என்பது இல்லை. மனிதன் நம்பிக்கையற்றவனாக வாழ்ந்து மரித்துக் கொண்டிருப்பான். மனிதனைப் பரலோக வாழ்வுக்குத் தயார்படுத்தும் இந்த உன்னத மார்க்கம், இயேசு ஆண்டவரின் தியாகத்தின் பலனே. இந்த மார்க்கம் புதியது, ஜீவனுள்ளது. இது இயேசுவினால், புதிதாக ஏற்படுத்தப்பட்டபடியால் "புதியது". இன்னும், இது எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டுள்ள படியால் "ஜீவனுள்ளது".

இயேசுவின் மூலம் ஏற்படப்போகும் இந்தப் புதிய மார்க்கம் குறித்து எரேமியா தீர்க்கன் மிக அழகாக முன்னுரைத்துள்ளார். "*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன் படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர் களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ....நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்தில் எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லு கிறார்.... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்* " (எரே. 31:31,34).

இந்தப் புதிய மார்க்கம் குறித்து இயேசு அறிந்திருந்தபடியால் தான், தன்னுடைய ஊழிய நாட்களிலேயே இது குறித்துப் பிரசங்கித்தார். ஆம், புகழ்மிக்க அந்தப் மலைப்பிரசங்கத்தில், மோசேயின் பழைய பிரமாணத்தின் காரியங்களோடு, தன்னுடைய உபதேசத்தை ஒப்பிட்டு, "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்", "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பேசியுள்ளார். (மத். 5:22,28,32, 34,39,44).

அதுமாத்திரமல்ல, ஒரு சமயம் இயேசு தான் இந்த உலகத்தை விட்டுக் கடந்து போகிறேன் என்று சொன்ன போது சீடர்கள் மிகவும் கலங்கிப் போயினர். அப்படிக் கலங்கியிருந்த சீடர்களிடம், நான் உங்களுக்காகப் பரலோகம் போகிறேன் என்று சொன்னதோடு நில்லாமல், "நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்றும் எடுத்துரைத்தார் (யோவான் 14:1-6).

இந்தப் புதிய மார்க்கமானது, நாம் பரலோகத்தில் பிரவேசிப்பதற்காக இயேசுவால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் இந்தப் புதிய மார்க்கத்தின் வழியாகத் தான் பரலோகம் போக முடியும். எபிரெயக் கிறிஸ்தவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், நன்றி கெட்டவர்களாக, தாங்கள் விட்டு வந்த பழைய மதத்திற்குத் திரும்பிப் போக எத்தனித்தனர். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு மார்க்கம் தவிர வேறு எதுவும் ஒருவனைப் பரலோகம் கொண்டு செல்லவே செல்லாது.

அப்படியானால், அருமையானவர்களே, நம்முடைய பக்தி வாழ்க்கையில் எந்த உபதேசத்தைக் கடைப்பிடித்துக் கொண்டுள்ளோம்? புதிதும், ஜீவனுமான மார்க்கம் தான் பரலோகத்திற்கு பாதை காட்டும் என்பது புரிகிறதா, இல்லையா? உண்மை நிலை இப்படியிருக்கும் போது, எபிரெயக் கிறிஸ்தவர்களைப் போல பழைய ஏற்பாட்டுக் காரியங்களில் நாட்டமுடையவர்களாயிருப்பது எப்படி நியாயமாகும்? நம்முடைய நாட்களிலான இன்றைய கிறிஸ்தவம் இத்தவறைப் பகிரங்கமாக அல்லவா செய்து கொண்டுள்ளது!.

உதாரணமாக, நாம் பரலோகம் செல்வதெற்கென்று கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் புதிதும், ஜீவனுமான மார்க்கம், "பண்டிகை" கொண்டாடுங்கள் என்று எங்கே சொல்லுகிறது? பண்டிகைக் காரியங்கள் பழைய ஏற்பாட்டில் தானே இடம் பெற்றுள்ளது. புதிய ஏற்பாட்டில், சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபத்தில், பண்டிகை கொண்டாடுங்கள் என்று எந்த சபைக்காவது ஆவியானவர் எழுதியுள்ளாரா? சொல்லுங்கள். பரலோகம் செல்லுவதற்காகக் கொடுக்கப்பட்ட மார்க்கத்தில் பண்டிகை இல்லையென்றால், அதை ஏன் நாம் கொண்டாட வேண்டும்? கட்டளையிடப்படாத ஒன்றைச் செய்து விட்டு பரலோகம் போகலாம் என்னும் தைரியம் நமக்கு எப்படி வருகிறது?.

புதிதும், ஜீவனுமான மார்க்கத்தைப் பெற்றுக் கொண்ட நாம் எபிரெயக் கிறிஸ்தவர்கள் போல் நன்றி கெட்டவர்களாய் நடவாமல், ஒருவேளை அப்படி நடக்கிறவர்களாயிருந்தால் இந்த

வருடத்தோடு இதற்கு ஒரு முடிவு கட்டிவிட்டு, புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு நம்மைச் சமூலமாய் ஒப்புக் கொடுப்போமாக!

**III. இரத்தத்தினாலே தைரியம் கொடுத்தார்**

எபிரெயக் கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெயர் ஆசிரியர் இப்பகுதியில் எடுத்துக் கொடுக்கும் இன்னுமொரு வாதம், அவருடைய இரத்தத்தினாலே தைரியம் உண்டாயிருக்கிறது என்பது.

இங்கே தைரியம் என்பதற்கான பொருள் துணிச்சல் அல்ல. மாறாக, "மகிழ்ச்சியோடு கூடிய நம்பிக்கை". இப்படிப்பட்ட நம்பிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிடைத்திருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் பிரவேசிக்கும் இம் மகிழ்ச்சியின் நம்பிக்கை கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படுவதற்கு முன் வாழ்ந்தவர்களுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. பேதுரு அப்போஸ்தலன் இக்கருத்து குறித்து தனது முதலாம் நிருபத்தில் கோடிட்டுக் காட்டுகிறார். "*உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்* " என்று (1 பேதுரு. 1:10-11). உண்மை நிலை இப்படியிருக்கிறபடியால் சிலுவைக்குப் பின்னால் வாழ்கிறவர்களுக்கு கிறிதுவின் இரத்தம் தைரியத்தைக் கொடுக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இந்த தைரியம் கிறிஸ்து தாமே தனது சொந்த இரத்தத்தோடு உலகத்தாருடைய பாவ நிவர்த்திக்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்ததினாலே கிடைத்திருக்கிறது.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழ்பவர்கள் பெற்றுக் கொள்ளும் தைரியத்திற்கான இன்னொரு காரணம், தமது சொந்த இரத்தத்தோடு பிரவேசித்த இயேசுவானவர், அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களை ஆசீர்வதிக்கும்படியாகவும், அவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படியாகவும் பிரதான ஆசாரியராய் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார். இதன் மூலம் உலகத்தாருடைய பாவத்தை நிவர்த்தி செய்யும் வல்லமை கொண்ட இவருடைய இரத்தத்தினாலே, நாமும் அவரைப் பின்பற்றி, பரலோகத்தில் பிரவேசித்து, பரலோக சுதந்திரத்தில் உடன் சுதந்திரராய் அவரோடு இருக்கும் சிலாக்கியம் பெற்றுக் கொள்ளுகிறோம். மகத்தான இக்காரியங்களெல்லாம், கிறிஸ்துவின் மாசற்ற, விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே தான் சாத்தியமாகிறது.

சக யூதர்களின் துன்புறுத்துதல்களினிமித்தம் விசுவாச வாழ்க்கையில் தடுமாறிக் கொண்டிருந்த எபிரெயக் கிறிஸ்தவர் களுக்கு இந்த உண்மைகளையெல்லாம் ஆசிரியர் எடுத்துரைத்து, "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோ கத்தில் நமக்கு உண்டென்று கூறுகிறோம்" (II கொரி. 5:1) அவர் களை திடப்படுத்துகிறார். இதிலே ஒருவனுக்குத் தெளிவு இருக்கு மானால் மரணத்தைப் பற்றிய பயம் என்பது இருக்காது. பவுலடி யாரால், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21) என்று சொல்ல முடிந்ததற்கான காரணம் இதுதான்.

இங்கே நாம் ஓர் உண்மையை கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. இயேசு கிறிஸ்துவின் மாசற்ற, விலையேறப் பெற்ற இரத்தம் உலகத்தார் எல்லோருக்காகவும் சிந்தப்பட்டிருந்தாலும், யாரெல்லாம் அந்த இரத்தத்தோடு தொடர்பு கொள்ளுகிறார் களோ அவர்களுக்குத் தான் அது நம்பிக்கையையும், தைரியத் தையும் கொடுக்கும். ஒருவன் தன்னை கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெறும்போது (கலாத். 3:27) தான், நாம் மேலே கண்ட சிலாக்கியங்களுக்குச் சொந்தக்காரனாகிறான்.

அப்படியானால், அருமையானவர்களே, கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைக்கும் சிலாக்கியங்களுக்கு நீங்கள் சொந்த மாகி விட்டீர்களா? ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாக்கும் இரட்சிப்பை, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தினடிப் படையில் பெற்றுவிட்டீர்களா? அதாவது, விசுவாசித்து (மாற்கு 16:16), மனந்திரும்பி (அப். 2:38), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10). பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுவிட்டீர்களா? (அப். 22:16) புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டி ருக்கும் நாம் இக்காரியங்களில் சரியானவர்களாக இருந்தால், புதிய ஆண்டுக்குள் பரலோக நம்பிக்கையோடு பிரவேசிக்க முடியும். பரலோக நம்பிக்கையோடு புதிய ஆண்டில் வாழும் ஒருவனுக்கு நிச்சயமாக நிறைந்த ஆசீர்வாதங்கள் பரலோக தேவனால் கொடுக்கப்படும்.

ஆகவே, பிதாவாகிய தேவனாலும், அவருடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவினாலும் நமக்காகச் செய்யப்பட்ட ஆவிக்குரிய நன்மைகளுக்கு நாம் எபிரெய கிறிஸ்தவர்கள் போல் நன்றியற்றவர்களாக இல்லாமல், நன்றியுடையவர்களாக வாழ்வோம்! தேவன் தாமே இப்புதிய ஆண்டில் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ❋

*அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அடியேனுடைய குடும்பத்தின் சார்பாகவும், ஆத்தும ஆதாயத் திட்டத்தின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.*

# ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?

Bro. J.C. சேர்ட்

மத உலகில் நாம் பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டு என்பது போன்ற வாக்கியங்களை அடிக்கடி கேட்கிறோம். அது மட்டுமல்ல, நாம் எல்லோரும் வித்தியாசமான பாதைகளில் பயணிக்கிறோம். ஆனால், நாம் எல்லோருமே ஒரே இடத்திற்குச் செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் பேசக் கேட்கிறோம். இப்படிப் பேசப்படுபவைகள் குறித்து நாம் நேரம் எடுத்து சிந்திக்காவிட்டால், அவைகளெல்லாம் சரிதானே என்பது போல தோன்றும். ஆனால், நிச்சயமாகவே அது வேதாகம உபதேசத்திற்கு மாறானதாயிருக்கிறது.

வேதாகமம் பரலோகம் பற்றியும், அதன் மொத்த அழகைப் பற்றியும், வரவிருக்கின்ற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எப்படி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் நேர்த்தியாகச் சொல்கிறது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள், என பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3). ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிற எல்லாரும், அவர் ஆயத்தமாக்கியிருக்கிற பரலோகத்தை விசுவாசிக்கிற எல்லாரும், நிச்சயமாகவே அங்கே போக விரும்புவார்கள். ஆனால்,. கேள்வி என்னவென்றால், நாம் எப்படி அங்கே போக முடியும்? அங்கே போவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக் கிறதா? அல்லது அநேக வழிகள் இருக்கிறதா?

இயேசு மறுபடியும், "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று சொன்னார் (யோவான் 14:6). பிதாவினிடத்தில் செல்வதற்கு வழி, ஒரே வழி இயேசு தான் என்பதை கவனியுங்கள், ஒருவர் பிதாவினிடத்தில் கிறிஸ்துவினால் அல்லது கிறிஸ்து மூலமாக மட்டுமே செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்வதற்கு அநேக வழிகள் இருந்தால் கிறிஸ்து மாத்திரம் ஒரே வழியாக இருக்கமாட்டார்.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பனாகவும், கிறிஸ்தவர்களை ஆடுகளாகவும், சபையை ஆட்டுத்தொழுவமாகவும் சித்தரிக்கிறார். இங்கே, இயேசு வாசலைப் பற்றி என்ன சொல்கிறார் என்று

கேளுங்கள்; " நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 10:7). இயேசு தொடர்ந்து, "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" என விளக்குகிறார் (யோவான் 10:9). இயேசு மறுபடியும், " மெய் யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும், கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்" என்றார் (யோவான் 10:1). வேறுவிதமாய்ச் சொன்னால், இயேசு அந்த ஆட்டுத் தொழுவத்துக்கு வாசல் என்று சொல்கிறார், சபைக்குச் செல்வதற்கு ஒரே வழி என்றும், பரலோகம் செல்வதற்கும் ஒரே வழி தான் என்றும் சொல்கிறார். ஆனால், முடிவிலே திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் என்ன நடக்கும்? அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியா விட்டால் தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை அல்லது பரலோ கத்திற்குள் பிரவேசிக்கக்கூட முடியாது என்கிறார். நிச்சயமாகவே, கர்த்தர் கொடுத்திருக்கிற வழியல்லாமல் வேறு வழியாய் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறவன் நரகத்தில் தள்ளப் படுவான்.

மற்றுமொரு சூழ்நிலையில் இயேசு தம்மைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்களை நோக்கி இப்படிச் சொன்னார். " இடுக்க மான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக் கிறவர்கள் சிலர் " என்றார் (மத். 7:13,14). நாம் ஒவ்வொருவரும் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டும் என்று இயேசு சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இடுக்க மான வாசல் இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

இயேசு தான் சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழி. அதன் மூலமாக ஒருவர் பரலோகத்திற்குக் கடந்து செல்கிறார். இயேசு தொடர்ந்து சொல்லும் போது, இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் தங்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் நெருக்கமான வழியைக் கண்டடைகிறார்கள். இந்த விஷயத்தில் ஒரே வாசல், ஒரே வழிதான் இருக்கிறது. அந்த ஒரே வழி தான் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும். யார் இந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பவர்கள். அதன் பின்பு, கிறிஸ்து அடுத்த வழி பற்றி பேசுகிறார். வாசல் விரிவும், வழி விசாலமு மாயிருக்கிற கேட்டுக்கு அழைத்துச் செல்லும்

வழியில் பயணம் செய்பவர்கள் பற்றி. இதில் பயணிக்க யார் துணிவார்? பெரும் பாலானவர்கள், மாம்சசிந்தை உடையவர்கள் மற்றும் தேவ பக்தி யற்றவர்கள். கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்க மறுத்து, தங்கள் வழியில் காரியங்களைச் செய்ய முடியும் என காரணகாரியங்களைக் காட்டுபவர்கள் தான். விசாலமான வழியில் பயணிப்பவர்கள். இன்னும் மனிதனால் உண்டாக்கப்பட்ட சபை களில் சேருபவர்கள்; மனிதருடைய பெயர்களை தரித்துக் கொள்பவர்கள், தங்கள் பிரியத்தின்படி ஆராதிப்பவர்கள். இவர்கள் தான் ஏமாற்றப்பட்டவர்கள், மற்றவர்களை ஏமாற்றுபவர்கள். உண்மையில்லாத கிறிஸ்தவனும் இந்தக் கூட்டத்தில் தான் இருப்பான். ஆனால், இந்தப் பாதை அல்லது வழி எங்கே அழைத்துச் செல்கிறது? இது, நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிறது. ஆம், இவர்களில் அநேகர் நேர்மையும், உண்மையுமானவர்களாய் இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் பக்தி யுள்ளவர்களாயு மிருப்பரார்கள். ஆனால், அவர்கள் விசாலமான வழியில் இருக்கிற காரணத்தால் இழந்து போவார்கள்.

என் நண்பர்களே, ஒரு முக்கிய தலைநகரத்திற்குச் செல்வதற்கு பல வழிகள் இருக்கிறது. ஆனால், உங்களிடம் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக மட்டும் பயணம் செய்ய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கும் நிலையில், நீங்கள் வேறொரு வழியைத் தெரிந்து கொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் பிரச்சனையில் மாட்டிக் கொள்வீர்கள். அதுபோலவே கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும், வல்லமையும் உண்டு (மத். 28:18). அந்த அதிகாரத்திற்கு நாம் மரியாதை கொடுத்து கர்த்தர் கொடுத்திருக்கிற அறிவுரைகளை நாம் பின்பற்றும் போது அதுவும் இதே விதமாகத்தான் இருக்கிற தென்பதைக் காணமுடியும். கர்த்தர் வகுத்துத் தந்திருக்கும் பாதை யில் நாம் பயணம் செய்வது அவசியம்.

பரலோகத்திற்குச் செல்லும் வழி பற்றி நாம பேசுவதில் நமக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்றால், மனிதன் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் நாம் அதை அணுகுவது. ஒரு பட்டணத்துக்கு அநேக வழிகள் இருந்து, எல்லா வழிகளுமே ஒருவரை அந்தப் பட்டணத்துக்கு அழைத்துச் செல்வது உண்மை யானால், ஆவிக்குரிய ரீதியிலும் இது உண்மையாகத்தானே இருக்க வேண்டும். ஆனால், கர்த்தரைப் பொறுத்தவரை, அவருடைய வழியைப் பொறுத்தவரை, ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. வேறு வழிகள் இருக்கிறது போல் நமக்குத் தெரிய லாம், பல மத நம்பிக்கைகள், மனுஷருடைய சபைகள் போன்று வேறு வழிகள் நமக்குத் தெரியலாம். ஆனால், இவைகள் எல்லாம் பரலோகத்திற்கு செல்லும் வழிகள் அல்ல. மனிதனால் உண்டாக் கப்பட்ட வழிகள் மற்றும் அமைப்புகள் மூலமாக யாரும் பரலோகம் செல்ல முடியாது. இதை உணர்ந்து கொள்வதற்கு, நாம் செய்ய வேண்டியதெல்லாம், வேதாகமத்தைத் திறந்து வாசிப்பது தான்.

கிறிஸ்து இப்படியாகச் சொன்னார் "மனுஷருடைய கற்பனை களை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று (மத். 15:9).

மீண்டும் கிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே, பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பா னேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பத்தில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத் தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்; அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறிய வில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன், (மத். 7:21-23). இதே மாதிரியான அநேக வாக்கியங்களை வேத வசனங்களில் நாம் காண முடியும். நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருந்து, காரியங்களை நம் வழியில் செய்து, மனிதனால் உண்டாக்கப் பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர் களைத் தரித்து, நாம் தெரிந்து கொள்ளுகிறபடி ஆராதித்து, நாம் எந்த வழியில் பயணிக்க விரும்புகிறோமோ அதே வழியில் பயணித்து அதே நேரத்தில் பரலோகம் செல்ல முடியும் என்று நம்மால் நினைக்க முடிகிறதா? ஒருவேளை நாம் அப்படிச் சிந்திக்கத் தலைப்பட்டால், நிச்சயமாக நாம் தவறு செய்கிறவர் களாயிருப்போம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியாய் இருந்தார். தன் மார்க்கத்திற்காக பக்தி வைராக்கியமாக இருந்தார். கர்த்தருடைய சபையை அவர் துன்பப்படுத்தின போதிலும் அவருக்கு நல்மனச்சாட்சி இருந்தது. ஆனால், தான் தவறு செய்ததை அவர் கண்டு கொண்டார். அவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கர்த்தருக்கு கீழ்ப்படிந்த போது தான் இரட்சிக்கப் பட்டார் (அப்போஸ்தலர் 9 மற்றும் 22 அதிகாரங்கள்). ஆனால், கொர் நேலியுவும் அவன் வீட்டாரும் எப்படி? அவர்கள் நல்லவர் களாக இருந்தார்கள். அவர்கள் தானதர்மங்களைச் செய்து அடிக்கடி பரலோகத்தின் தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப் பட்டார்கள். அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரம் பரலோகம் செல்வதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது என்கிற உண்மைக்கு ஆதரவாக வசனங்களில் அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

என் நண்பர்களே, இது பற்றி யோசித்துப் பாருங்கள். வேதாகமம் ஒரே தேவனும், ஒரே கர்த்தர் அல்லது ஒரே இரட்சக ரும், ஒரே பரிசுத்த ஆவியும், ஒரே சரீரம் அல்லது சபையும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்று போதிக்கிறது (எபே. 4:1-6). வேதாகமம் ஒரே ஒரு

நற்செய்தி அல்லது இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று சொல்கிறது. கர்த்தர் இரட்சகராயிருக்கிறார், ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட ஒரே விதமாக செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவி கொடுக்கவும் (மத். 17:5) அவரை விசுவாசிக்கவும் (யோவான் 8:24) அவரவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் (லூக். 13:3) கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வும் (மத். 10.32) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (மாற்கு 16:16; அப். 2:38). கிறிஸ்து அதே நற்செய்தி தான் முழு உலகத்திற்கும், சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் (மாற்கு 16:15,16). கிறிஸ்து இரட்சிக்கப்பட்ட எல்லோரையும் தாம் கட்டின சபையில், எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையில், தன் சுயரத்தத்தினாலே எந்த சபையை வாங்கினாரோ அந்த சபையில், எந்த சபைக்கு அவர் தலையாயிருக்கிறாரோ அந்த சபையில், எந்த சபைக்காக ஒரு நாள் திரும்பி வரப் போகிறாரோ அந்து சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப். 2:47; மத். 16:16; எபே. 5; அப். 20:28). தேவன் தம்மை எல்லோரும் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என விரும்புகிறார் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவா 4:24). ஆகவே, எல்லோரும் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்காக, ஜெபிப்பதற்காக காணிக்கை கொடுக்கும்படியாக, தேவனைத் துதித்துப் பாடும்படியாக கூட வேண்டும் (அப். 20:7; 2 தீமோ. 2:15; அப். 2:45; எபேசி. 5:19). தேவன் தம்முடைய ஜனங்களெல்லாரும் எல்லாவற்றையும், கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் (கொலோ. 3:17). அதன் பொருள், எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் (அப். 11:26) மற்றும் எல்லாரும் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்த வேண்டும் (வெளி. 2:10) என்பதே.

நாமெல்லாரும் வாசிக்கவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் நம் அனைவருக்கும் ஒரே வேதாகமம் இருக்கிறது. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் இருந்தால் நாம் செல்வதற்கு ஒரு பரலோகம் இருக்கிறது. அதுபோலவே, பாவிகளும், உண்மையில்லாதவர்களும் செல்வதற்கு நரகம் ஒன்று இருக்கிறது (மத். 25:46).

இப்போது, இதற்கு முன்பு சொல்லப்பட்டவைகளெல்லாம் உண்மையாக இருந்து, நீங்களாகவே வேத வசனங்களை வாசித்து, படித்து, அவைகள் உண்மைதான் என்று நீங்களாகவே பார்க்க முடிந்தால், பரலோகத்திற்கு ஒரு வழிக்கு மேல் எப்படி இருக்க முடியும்? ஆம், பரலோகம் செல்வதற்கு வழி ஒன்று

இருக்கிறது, ஒரே ஒரு வழி தான் இருக்கிறது, அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் நாம் பயணம் செய்யும்படி, அந்த வழியை நாம் ஏற்றுக் கொண்டு, கர்த்தர் நம்மை என்ன செய்யும்படியாக சொல்கிறாரோ அதைச் செய்தால் நாம் வேறுவழியாக பரலோகம் செல்லவே முடியாது. ஞானி இப்படியாகச் சொன்னார் மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 14:12).

எந்தப் பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இடுக்கமான வழியிலா? அல்லது விசாலான வழியிலா? கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியிலா? அல்லது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியிலா? ஒரே நேரத்தில் உங்களால் இரண்டு வழிகளிலும் பயணம் செய்ய முடியாது. எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கிறிஸ்து சொன்னார் (மத். 6:24). நாம் ஒன்று அவரோடிருக்கிறோம் அல்லது அவருக்கு விரோதமாயிருக்கிறோம் என்று இயேசு சொன்னார் (மத். 12:30). ஆகவே, நாம் எந்த வழியில் பயணம் செய்வது எனத் தீர்மானிப்பது நம் கையில் விடப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவையும், பரலோகத்திற்குச் செல்லும் வழியையும் தெரிந்தெடுக்கும்படியாக நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம்.

## நாளும் நடப்பும்

1. வரும் கல்வியாண்டில் 1 முதல் 8-ம் வகுப்பு வரை முப்பருவ முறை - தமிழக அரசு.
2. அனைவருக்கும் புற்றுநோய் மருத்துவ பரிசோதனை-மத்திய அமைச்சர்.
3. சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு; அரசு முடிவை நிறுத்தி வைத்தது.
4. முல்லைப் பெரியாறு பிரச்சனைக்கு வன்முறையில் தீர்வு காண முடியாது - தமிழக ஆளுநர்.
5. குழந்தைத் திருமணத்தை எதிர்த்த சிறுமிகளுக்கு குடியரசுத் தலைவர் விருது
6. மேற்கிந்தியா தீவுகளுக்கு எதிரான கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

# நிழலும், நிஜமும்

(The Shadow and the Reality)

**Bro. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே,

இந்த நிழலும் நிஜமும் தலைப்பின் செய்தியை வாசிக்கின்ற திருமறை ஆசான் பத்திரிக்கையில் வாசகர்களாகிய உங்களுக்கு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்த மாத இதழின் 18ம் பக்கத்தில் கடைசி பத்திக்காக சரியான இடம் இல்லாததற்காக சுருக்கியதில் சரியான அர்த்தம் வரவில்லை என்பதற்காக இந்த மாதம் ஒரு சிறு விளக்கத்தோடு தொடங்குகிறேன். அந்தியோகியாவிலிருந்து புதிதாக வந்திருந்த பவுல், பர்னபா மற்றும் அவர்களோடு வந்திருந்த சகோதரர்கள் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தை புறஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் பரிசேய சமயத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள், புறஜாதியிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களும் மேசேயின் நியாயப் பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டை கைக்கொள்ளவேண்டும் என்றும் தர்க்கம் பண்ணினார்கள். இப்படி இவர்களுக்குள் அந்தி யோகியாவிலும் "மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும்" உண்டா னது என்பதும் தெரியவந்தது, (அப். 15:2). ஆகையால், அப்போஸ்தலரும், மூப்பரும் இந்தக்காரியத்தைக் குறித்து ஆலோசனைப் பண்ணும்படி கூடினார்கள், (அப். 15:6).

இப்படி மிகுந்த தர்க்கம் உண்டானபொழுது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி பேச ஆரம்பிக்கிறார். அனைவரும் அப்போஸ்தலனாகிய பேதுருவை கவனிக்கிறார்கள். ஒரு கணம் அப்போஸ்தலனாகிய பேதுருவைக் குறித்து யோசித்துப் பார்க்கி றோம். அப் 1ம் அதிகாரத்தில் யூதாஸ் காரியோத்திற்கு பதிலாக வேறு ஒரு அப்போஸ்தலரை தெரிந்தெடுக்கிற விஷயத்தில் உறுதியாக பேசினவர், (அப். 1:16-22) அப். 2ம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் மற்ற 11 அப்போஸ்தலர்களோடு முதல் முதலிலே வல்லமையாய் சுவிசேஷத்தை பிரசங்கித்தவர் (அப். 2:14:40).

அப். 3ம் அதிகாரத்திலும், 4ம் அதிகாரத்திலும் யாருக்கும் பயப்படாமல் தைரியமாய் கிறிஸ்துவைக் குறித்துப் பேசினவர், (அப். 3:12-26; 4:8-12; 19-20; அப். 5ம் அதிகாரத்தில்

அனனியா சப்பீராளை கண்டித்தவர், (அப். 5:1-11). அதே அதிகாரத்தில் இயேசுவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணக் கூடாதென்று மிரட்டப்பட்டப்பொழுது தைரியமாக பேசினவர், (அப். 5:25-33).

அப்போஸ்தலர் நடபடிகள் 10 ஆம் அதிகாரத்தில் முதல் முதல் புறஜாதியனான கொர்நேலியும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட பறவைக்கூட்டின் தரிசனங்கண்டு, போய்த் தீர்க்க தரிசனம் உரைத்தவர், அப்போஸ்தலர்கள் நடபடிகள் 11ம் அதிகாரத்தில் அதை உறுதிப்படுத்தி விளக்கியவர், (அப். 11:1-18) இப்படிப்பட்ட பேதுரு பேச ஆரம்பித்தபோது எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை வந்தது. மேலும், அவர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தார்.

அவர் பேசியது "...சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்து கொண்டார்" என்று தான் கொர்நேலியு வீட்டாருக்கு சுவிசேஷம் போதித்ததைக் குறித்து இங்கே நினைவுப்படுத்திகிறார், அப். 15:7. சற்று முன்பு தான் நாமும் கூட அந்த நிகழ்ச்சியை நம்முடைய மனதில் நினைவுப்படுத்தினோம். ஏன்? அப்போஸ்தலனாகிய பேதுரு அந்த நிகழ்ச்சியை நினைவுப்படுத்துகிறார்? அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் முதன் முதலில் இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்பட்டபொழுது ெப்படி பரிசுத்த ஆவியானவர் பல பாஷைகள் பேசும் வல்லமையைக் கொடுத்து இரட்சிப்பை உறுதி செய்தாரோ அதேபோல முதல் முதல் புறஜாதியார் இரட்சிக்கப்பட்டபோதும் பரிசுத்த ஆவியானவர், புறஜாதியாரின் இரட்சிப்பையும் உறுதி செய்தார் என்பதை உறுதிப்படுத்தும்படி அந்த நிகழ்ச்சியை நினைவுப்படுத்துகிறார்.

ஏனென்றால், அவருடைய அடுத்த வார்த்தைகள் அதை உறுதி செய்யும்படியாக இருக்கிறது. அவர் சொன்னது; இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார் என்கிறார், (அப். 15:8; 2:1-40; 10:34-48). இதிலிருந்து அவர் ஒரு காரியத்தை தெளிவுபடுத்த விரும்புகிறார். இந்த எருசலேம் கூட்டத்திலே அமர்ந்திருக்கிறவர்களுக்கு இதனுடைய விளக்கம் இன்னும் கொஞ்சம் தேவையாயிருந்தது.

ஆகவே, பேதுரு இன்னும் அதற்கு வலுசேர்க்கும்படியாக, "விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் (தேவன்) சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இராதபடி செய்தார்" என்கிறார். (அப். 15:9) இதிலிருந்து ஒரு காரியம் தெளிவாயிற்று. இரட்சிப்பு அளிக்கப்படும் விஷயத்திலே

யூதன் புறஜாதியான் என்கிற வித்தியாசத்தை தேவன் வைக்கவில்லை. இதுவும் பேதுரு, கொர்நேலியு வீட்டிலே போதித்து நாம் கேள்விப்பட்ட வசனத்தை நினைவுப்படுத்த தூண்டுகிறது. "அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி; தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்றாரே. இந்த வார்த்தைகளை நினைவுப்படுத்தும்போது நம்முடைய இருதயத்தில் எவ்வளவு சந்தோஷம் பொங்கி எழுகிறது. இவ்வுலகத்தில் இருக்கின்ற எல்லோரும் ஒரே விசுவாசத்தினாலே தேவனுடைய நீதியின்படி, திட்டத்தின்படி கிறிஸ்துவுக்குள் நடந்தால் அல்லது இருந்தால் இந்த உலகமே ஒன்றாயிருந்திருக்குமே ஒரே குடும்பமாயிருக்குமே சண்டைகள், பிரிவினைகள் இல்லாமல் மார்க்க பேதங்கள், நிற வேறுபாடுகள், மொழி வேறுபாடுகள், கலாச்சார வேறுபாடுகள் இல்லாமல் ஏழை, பணக்காரன் என்கிற பொருளாதார வேறுபாடுகளும் கூட இல்லாமல் அனைவரும் ஒரே சகோதரத்துவத்தோடு இருக்கலாமே. தேவன் அப்படித்தானே திட்டமிட்டார், எதிர்பார்த்தார். ஆனால், ஏன் இப்படி பிரிந்திருக்கிறோம். இதற்கு மனிதனுடைய இருதயமும் அதின் ஆசையும் தான் காரணம்.

அதே நேரத்தில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்களும் நூற்றுக்கணக்கான பிரிவினைகளாயிருக்கிறோமே ஏன்? இதற்கு உபதேசம் தான் முக்கியக்காரணம். இருந்தாலும், யார் அதிகாரி அல்லது பொறுப்பாளி என்கிற நிலையும் ஒரு காரணமாமக நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், தேவன் அவருடைய குமாரராகிய கிறிஸ்துவுக்குக் கொடுத்த அதிகாரமேயன்றி விசேஷமாக ஆவிக்குரிய காரியங்களில் வேறொரு அதிகாரம் பிரயோஜனமில்லை என்பதை சரியாக புரிந்து கொண்டால் ஒருவேளை தேவன் எதிர்பார்த்த ஒற்றுமை வரலாம்.

தொடர்ந்து பேதுரு "இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியை சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனை சேதிப்பானேன்?" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு கேள்வியைக் கேட்டபொழுது பரிசேய சகோதரர்களின் முகங்களில் ஒரு தொய்வு காணப்படுகிறது. ஏனென்றால், அவர்களுடைய யோசனைக்கு எதிரான கருத்தை பேதுரு வெளிப்படுத்தியிருந்தார். இது பரிசேய சகோதரர்களின் நம்பிக்கையை உடைத்ததுபோல இருந்தது. இங்கே, யூத சகோதரர்களைப் பார்த்து, "நம்முடைய பிதாக்கள்" என்று சொன்னது முற்பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு போன்றவர்களைக் குறிக்கவில்லை. மாறாக, எகிப்திலிருந்து சிவந்த சமுத்திரத்தைக் கடந்து சீனாய் மலையண்டை நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடங்கி

கிறிஸ்துவின் சிலுவை வரைக்கும் வாழ்ந்தவர்களைக் குறிக்கிறது. (உபா. 5:3,4). இந்த வசனத்தில் மோசே திட்டமாக, "அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணா மல் இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" என்கிறார். மோசே இந்த வார்த்தைகளை யோர் தானுக்குக் கிழக்கே வனாந்திரத்தின் சமனான வெளியிலே அவர் கள் வந்த போது அங்கே அந்நாளில் பேசினார் (உபா. 1:1,2).

தொடர்ந்து பேதுரு சொன்ன "நம்மாலும்" என்பது பேதுரு வின் காலத்தில் சிலுவைக்குமுன் வாழ்ந்தவர்களைக் குறிக்கிறது. இங்கே அவர், "சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியை" என்று குறிப்பி டுகிறாரே அது என்ன என்று யோசிக்க வேண்டி யுள்ளது. வண்டி யில் அல்லது நிலத்தை உழுகிற ஏரில் மாடுகளின் கழுத்தின் மேல் சற்று நீளமான உருளையான மரத்தை வைத்து அந்த மரத்தை மாடுகளின் கழுத்தை விட்டு நீங்காதபடி ஒரு வலுவான கயிற் றால் பூட்டுவார்கள். அந்தக் கட்டைக்குப் பெயர் நுகத்தடி என்பது நமமெல்லாருக்கும் தெரியும். அதிகபாரமாக இருந்தாலும் எதிர் மேடாக இருந்தாலும் மாடுகள் அல்லது மற்ற மிருகங்கள் அந்த நுகத்தடியைவிட்டு வெளியிலே வரமுடியாது என்பதைப் போல நியாயப்பிரமாணத்தின் காலத்திலே இஸ்ரவேலருடைய வாழ்க்கையும் இருந்தது.

ஒருவர் மாம்சத்தின்படி இஸ்ரவேலின் 12 கோத்திரத்தில் ஒருவராக பிறந்துவிட்டால் அவர் கட்டாயமாக மோசேயின் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டாக வேண்டும். எப்படி ஒரு மிருகம் நுகத்தடிக்குள் அகப்பட்டுக் கொள்ளுகிற தோ அதைப்போல அவன் பழைய ஏற்பாடாகிய நியாயப் பிரமா ணத்திற்குள் அகப்பட்டுக் கொள்ளுகிறான். நியாயப் பிரமாணத் தை (பழைய உடன்படிக்கையை விட்டு) நான் வெளியிலே போவேன் என்று ஒரு இஸ்ரவேலனால் சொல்ல முடியாது. அப்படி சொன்னால் அவன் குற்றவாளியாயிருப்பான். நியாயப் பிரமாணத்திலே ஒரு சட்டத்தை மீறினாலும் அவன் எல்லா சட்டங் களையும் மீறினதாக, இப்படியும் குற்றவாளியாக இருப்பான், (யாக். 2:10) இந்தக் கடுமையான சட்டத்திற்காக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவரும் முழுமையாக தேவனுடைய நீதி யைப் பெறமுடியாமல் அதாவது, பரலோகம் போகிற அளவிற்கு அல்லது பாதாளத்தை விட்டு வெளியே வரும் அளவிற்கு நீதி மானாக முடியாமல் போனார்கள் என்கிற பரிதாபமான நிலையில் இஸ்ரவேலர்கள் இருந்தார்கள், (ரோம. 3:10,23) இதனுடைய தொடர்ச்சி அடுத்த மாதத்தில் கவனிப்போமாக. இந்த செய்தியின் பேரில் உங்களுக்கு சந்தேகம் கேள்விகள் இருந்தால் பத்திரிக்கை ஆசிரியருக்கு அலுவலக விலாசத்திற்கு எழுதும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ❋

## பெண்கள் பகுதி

# " பலமான குடும்பம் பலமான கிறிஸ்தவர்களை உருவாக்கும் "

### Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே இந்த ஆண்டைக் கடந்து, அவருக்குச் சித்தமானால் புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்க உள்ளோம். காலங்கள் கடந்து கொண்டேயுள்ளது. அறிவியல், பொறியியல் மற்றும் கலைத்துறைகள் எண்ணிப் பார்க்க முடியாத வளர்ச்சி பெற்று முன்னேறிக் கொண்டே உள்ளது. இதனிடையே வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் சற்று நின்று, சிந்தித்து நம் குடும்பம் பற்றி வேதாகமம் சொல்லும் ஆலோசனைகளை கவனிப்போம்.

ஒருவர், கிறிஸ்துவுக்கு சீஷர்களாக உருவாக வேண்டுமென்றால், பல இடங்களிலிருந்து அவனுக்கு உதவி தேவைப்படுகிறது. தனிப்பட்ட ஒருவரே தன்னை ஒரு பலமுள்ளவராக வளர்த்திக் கொள்ள தன்னை ஒப்புக்கொடுத்தல் அவசியம். உள்ளூர் சபையானது அப்பேர்பட்ட நபருக்கு சரியான ஆகாரம் கொடுத்து, பல முயற்சிகள் மூலம் அவரை வளரச் செய்யலாம். ஒரு நபரை தீயவனாகவோ, நல்லவனாகவோ மாற்ற குடும்பம் ஒரு மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. ஒரு பலமான கிறிஸ்தவனை வளர்க்க குடும்பத்தின் வழிமுறைகள் பற்றி இப்பாடத்தில் நாம் கற்றுக் கொள்வோம். இது ஒரு கிறிஸ்தவர் குடும்பத்தால் தான் முடியும். கணவருக்குக் கீழ்ப்படிகிற மனைவியையும், மனைவியாரில் அன்புகூர்ந்து, அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருக்கிற கணவரையும், எல்லாக் காரியத்திலேயும் பெற்றோருக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகளையும் கொண்டுள்ளதே கிறிஸ்தவக் குடும்பம் (கொலோ. 3:18-21).

ஒருவருடைய குணத்தை உருவாக்குவதில் சபையை விட குடும்பத்திற்கே அதிக பங்கு உள்ளது. அதிகபட்சமாக ஒரு குழந்தை சபையில் 6 மணி நேரம் செலவிட முடியும். பள்ளிக்கூடம் செல்வதை விடுத்து, சுறுசுறுப்பான 75 மணி நேரத்தை வீட்டிலே செலவிடுகிறான். ஒரு குழந்தைக்கு அடிப்படை குணங்கள் உன் வீட்டில் 6 வயதிற்குள் கற்றுக் கொள்ளப்படுகிறது. ஒருவனுக்கு வாழ்க்கையின் பண்புகள் தானாக பெற்றுக் கொள்வதுண்டு, கற்றுக்கொள்வதுமுண்டு என்பதை மறந்து விடக்கூடாது. குடும்பத்தில் தான் ஒருவன் ஒழுக்க காரியத்திலும், ஆவிக்குரிய காரியத்திலும் புதுப்பிக்கப்படுகிறான். ஒருவர்

பாரத்தை "ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா. 6:2) என்ற வசனத்தை செயல்படுத்த உதவுவது குடும்பம்.

ஒரு குடும்பத்தின் ஆண்டவராக இயேசுவை உயர்த்தி வைக்க வேண்டும். கண்ணில் பார்க்க முடியாத ஒரு விருந்தாளியாக இயேசுவை நம் குடும்பத்தில் வைப்பதோடு, எப்போதும் அவர் நம் குடும்பத்துடன் இருக்கிறது என்ற உணர்வோடு இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவினுடைய சித்தத்தின்படி இயங்கும் ஒரு குடும்பமாக நம் குடும்பம் இருக்க வேண்டும். வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதைச் செய்தாலும், அதையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் (கொலோ. 3:17).

பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப் போடும் குடும்பமாக நம் குடும்பம் இருக்க வேண்டும் (1 கொரி. 5:7). ஒரு சுத்தமான, சுகாதாரத்துடன் இருக்கும் மருத்துவமனை ஒரு நோயாளிக்கு எளிதில் சுகத்தை கொடுக்க உதவி செய்யும். அதே சமயம் அசிங்கமான, குப்பை, கூளங்கள் நிறைந்த மருத்துவமனை சுகத்திற்கு பதிலாக நோயாளியின் நோயை அதிகப்படுத்துகிறதாய் இருக்கிறது. எனவே, நாமும் நம் குடும்பத்தில் ஒழுக்கக்கேட்டைத் தூண்டும் தொலைக்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், புத்தகங்கள், தேவையில்லாத பத்திரிக்கைகள் இவற்றை தூக்கி எறிந்து விட வேண்டும் (எபேசி. 5:3, 4). குடி வெறி, களியாட்டம் இவைகளை ஒழித்துக் கட்ட வேண்டும். ஏனென்றால், நாம் கனிகளினாலே அறியப்படுகிறோம். (மத். 7:16) மாறாக, நம் பிள்ளைகளுக்கு தேவனுடைய கட்டளைகளை திட்டமிட்டு போதிக்கப் பழக வேண்டும் (உபா. 6:7,8). ஒருவன் அப்பத்தினாலே மாத்திரம் பிழைக்க முடியாது (மத். 4:4). தேவனுடைய வார்த்தை அவசியம். நாம் நம் விசுவாசத்தை செயல்படுத்தும் விதத்தை நம் பிள்ளைகள் பார்த்து பலனடைய வேண்டும். (உபா. 32:7). நாம் ஒவ்வொருவரும் சரியான உதாரணமாக வாழ வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை மறந்து விடவே கூடாது. (1 தீமோத். 4:12).

நாம் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடி முதல் இடம் கொடுக்கிறோமா? என்பதை அறிந்து கொள்ள (மத். 6:33) நம் பிள்ளைகளுக்கு சகல உரிமையும் இருக்கிறது. பிள்ளையானவன் நடக்க வேண்டிய சகல ஆவிக்குரிய வழிகளிலும் அவர்களை கட்டாயம் நடத்த வேண்டும். (நீதி. 22:6). வேதாகமம் சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களிலும் நம் பிள்ளைகளை பங்கு பெறச் செய்வது பெற்றோரின் கடமை, கடமை, கடமை. நம் பெண் பிள்ளைகளும், ஆண் பிள்ளைகளும் உலகிற்கு உப்பாகத் திகழ வேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டும். (மத். 5:13) இல்லாவிட்டால் உலகம் அவர்களை மேற்கொண்டு விடும். (மத். 5:13).

மேலும், சபையில் உள்ள ஊழியர்கள், மூப்பர்கள் போன்றவர்களை மதிக்கும்படி பிள்ளைகளுக்கு கற்றுக்

கொடுப்பதில் குடும்பம் தான் அதிக பங்கு வகிக்கிறது. (1 தெச. 5:12,13). ஒரு பலமான சபை உருவாவதற்கு இப்படிப் பட்ட மனநிலை மிக, மிக அவசியம். முறு முறுப்பில்லா மல் ஒருவரை ஒருவர் உப சரிக்க (1 பேதுரு 4:9) குடும்பத் தில் உள்ள குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

மிகவும் துக்கமான விஷயம் என்னவென்றால், பரிசுத்தமற்ற செயல்களால் சில குடும்பங்கள் வலுவிழந்து போய்விடுகின்றன. பின் வாங்கிப் போகிற ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உலகத்தோடு வேஷம் தரித்து தன்னுடைய துணையையும் தங்களோடு கெட்டுப் போகும்படியாக செய்து விடுகிறார்கள். (1 கொரி. 15:33) ஜாக்கிரதையில்லாத பெற்றோரைப் பார்த்து வளரும் பிள்ளைகள் கெட்ட பழக்கங் களை எளிதில் கற்றுக் கொள்கி றார்கள். தேவனுக்காக வைராக் கியமாக செயல்படுகிறவர்கள் இப்பேர்பட்டவர்களைப் பார்த்து சோர்வுற்று தங்கள் செயல் பாட்டை குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் கூட சில நேரங்களில் ஏற்பட்டு விடு கிறது. எப்போதும் சண்டை யிட்டுக் கொண்டேயிருக்கும் பெற்றோரைப் பார்த்து வளரும் பிள்ளைகள் கெட்ட பழக்கங் களை எளிதில் கற்றுக் கொள்கி றார்கள். தேவனுக்காக வைராக் கியமாக செயல்படுகிறவர்கள் இப்பேர்ப்பட்டவர்களைப் பார்த்து சோர்வுற்று தங்கள் செயல்பாட்டை குறைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் கூட சில நேரங்களில் ஏற்பட்டு விடு கிறது. எப்போதும் சண்டை யிட்டுக் கொண்டேயிருக்கும் பெற்றோரைப் பார்த்து வளரும் பிள்ளைகள் சபையை பற்றி இருக்க வேண்டிய அளவு உயரிய இடத்தை தங்கள் மனதில் இருந்து எடுத்துப் போட்டு தாங் களும் சண்டைக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்.

நன்மையான காரியங் களைச் செய்வதற்கு சரியான இடம் இந்த உலகிலே ஒரு கிறிஸ்தவக் குடும்பம் மட்டுமே. ஆம், நம் குடும்பம் என்ற கதவுக்குள் வரும் யாவரும் கிறிஸ்துவுக்குள் பலமானவர் களாகவும், அர்ப்பணிப்புள்ள வர்களாகவும் இருக்க நாம் பாடுபடுவோம். ஒருவேளை கர்த்தருடைய தீர்க்கதரிசி உன் வீட்டில் என்னத்தைக் கண்டார் கள்? (ஏசாயா 39:4) என்று கேட்டால் நாம் என்ன பதில் சொல்வோம்?.

அன்பான சகோதரிகளே, தாய்மார்களே, குடும்பம் எவ்வளவு முக்கியம் என்று வசனத்தின் துணை கொண்டு ஓரளவு பார்த்திருக்கிறோம். நம் குடும்பத்தின் நிலை இப்போது எப்படி இருக்கிறது?. கிறிஸ்த வக்குடும்பம் உருவாகிக் கொண்டிருக்கிறதா? இல்லா விட்டால் பலமுள்ளவர்கள் நம் குடும்பத்தால் பலமிழந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்? அருமை யானவர்களே! சிந்திப் போம். ஒருவேளை வேத வசனம் சொல்லும் ஆலோச னைப்படி நாம் குடும்பம் நடத் தாமலிருந்தால் இந்த வருட இறுதியோடு அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு பலமான கிறிஸ்தவர்களை உருவாக்கும் பலமான குடும்ப மாக நம் குடும்பம் நடத்தப்பட முயற்சி செய்வோம். பாடுபடு வோம். பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வார். ஆமென். ❋

சிறுவர் பகுதி

# இயேசு எப்பொழுது பிறந்தார்?

**BRO. ABEL R. NAYAGAM**

இந்த நாட்கள் இயேசுவின் பிறப்பைக் குறித்து உலககெங்குமுள்ள பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் கொண்டாடிக் கொண்டிருக்கும் நாட்கள். டிசம்பர் 25 என்று பெரும்பாலானவர்கள் கொண்டாடினாலும், வேறு பல தேதிகளிலும் கிறிஸ்து பிறந்தார் என்று கொண்டாடும் கிறிஸ்தவ சமுதாயம் உண்டு. மொத்தத்தில் இக்காரியத்தில் கருத்தொற்றுமை இல்லை.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்று ஒரு முதுமொழி உண்டு. அதன் பொருள், சிறுவயதில் வரும் பழக்கம் கடைசி வரை தொடரும் என்பது. ஆகவே, நாம் சிறுவயதில் செய்யப் பழகும் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும், குறிப்பாக ஆன்ம காரியங்கள் குறித்து கவனமுடன் இருப்பது அவசியம். உண்மை தானே.



பெத்லகேமுக்கு வெளியே மேய்ப்பர்களின் வயல்வெளி

இயேசுவின் பிறப்பு குறித்து கூடுதலான தகவல்களை லூக்கா ஆசிரியர் கொடுக்கிறார். குடிமதிப்பினிமித்தம் யோசேப்பும், மரியாளும், கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்கு வந்தனர். இது அகஸ்துராயனுடைய நாட்களில் நடந்தது. (லூக். 2:1-2) மத்தேயு ஆசிரியர் எழுத்தின்படி இது மகா ஏரோதுவின் நாட்களில் நடந்துள்ளது.

நற்செய்தி நூல்கள் மற்றும் உலக சரித்திரத்தின்படி, இயேசு பிறந்தது கி.மு. 4-ம் ஆண்டு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது. ஆனால், உலககெங்கும் பயன்படுத்தப்படும் காலண்டர்களின் கணக்குப்படி இயேசு பிறந்தது கி.பி. 1 என்றாகிறது. காலண்டர் முறையைக் கண்டுபிடித்த "தியோனிசியஸ்" என்பவர் இயேசு பிறந்த வருடத்தைத் தவறுதலாகக் கணக்கிட்டு விட்டார். அந்தத் தவறு இன்றளவும் சரி செய்யப்படவில்லை.

ஆனால், இன்றைக்கு டிசம்பர் 25 இயேசு பிறந்த நாள் என்று பகிரங்கமாகக் கொண்டாடப்படுகிறது. ரோமர்கள் "சோல்" என்னும் ரோமக் கடவுளுக்கு விருந்து செய்யும்படி கடைப் பிடிக்கப்பட்டு வந்த இந்த நாள் தான், கி.பி. 354-ல் மதத் தலைவர் களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இயேசு பிறந்த நாளாக, "கிறிஸ்துமஸ்" ஆக மாறியது.

வேதாகமம், இயேசுவின் பிறப்பு குறித்து திட்டமான தேதி எதுவும் தருவதில்லை. இயேசு பிறந்த போது மேய்ப்பர்கள் வயல் வெளியில் இருந்தார்கள் என்று லூக்கா ஆசிரியர் குறிப்பிடுகிறார். (லூக். 2:8ff). டிசம்பர் மாதம் ஈரமும், பனியும், குளிரும் நிறைந்த மாதமாகையால், இயேசு பிறந்தது டிசம்பராக இருக்கக் கண்டிப்பாக வாய்ப்பில்லை. ஏப்ரல்-செப்டம்பர் வரையிலான ஏதோ ஒரு மாதமாக இருக்கவே வாய்ப்புண்டு.

தேவன் ஒரு நோக்கத்துடனேயே இயேசு பிறந்த தேதியை வெளிப்படுத்தவில்லை என்று தெரிகிறது. தான் உண்டு பண்ணின கர்த்தருடைய நாளுக்கான (ஞாயிற்றுக்கிழமை) முக்கியத்துவம் குறைந்து, இயேசு ஆண்டவரை வருடத்திற்கு ஒருமுறை நினைப்ப தோடு விட்டு விடுவார்கள் என்று எண்ணியுள்ளார்.

ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் பிறப்பை மாத்திரமல்ல, அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நினைவு கூர முடியும்.

இளம் வயதில் நாம் இக்காரியத்தில் தெளிவு பெறுவது நம்முடைய பக்தி வாழ்க்கை முழுவதிலும் பயன் தரும். ஆகவே, தெளிவு பெறுவோம்.

நாம் தெளிவு பெறுவதோடு, நம் குடும்பத்தில் உள்ள பெரியவர்களுக்கு இந்த உண்மையை எடுத்துச் சொன்னால் அவர்களும் தெளிவு பெற முடியுமே! செய்வோமா? ❋

# பொருத்தமான சுவிசேஷம்

## The Relevant Gospel

*Tim Nichols*

**தமிழில் : பென்னிமார்டின்**

**ந**மக்கு நெருக்கமானவர்களின் மரணம் வாழ்க்கையின் குறுகிய தன்மையை நமக்கு நினைவுபடுத்துகிறது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இரண்டு நண்பர்களின் அடக்க ஆராதனையில் நான் கலந்து கொண்டேன். அதில் ஒருவர் நீண்ட நாட்கள் வாழ்ந்தவர். மற்றொருவர் இளம் வயதில் வாகன விபத்தில் எங்களை விட்டுப் பிரிந்து சென்றவர். மற்றுமொரு பழைய நண்பர் சில நாட்களுக்கு முன்பு மாரடைப்பால் காலமானார். அவர் என்னை விட சில வருடங்கள் இளையவர்.

நான் படித்த பள்ளியில் இருபது வருடங்களுக்குப் பிறகு பழைய மாணவர்கள் மறுபடியும் ஒருவரையொருவர் சந்தித்த போது, என்னுடன் வகுப்பில் ஒன்றாகப் படித்த பத்துப்பேர் இந்த உலகத்தை விட்டுக் கடந்து சென்றதைக் கண்டுபிடித்தேன். அவர்களெல்லாரும் இளமையாகவும், ஆரோக்கியமாகவும் இருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது அவர்களில் இரண்டு பேர் என்னுடன் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டனர். அதில் ஒருவர் நட்சத்திர விளையாட்டு வீரராக இருந்தார். பல்கலைக் கழக அணியில் அவரோடு நான் போட்டி போட முடியாததால் மற்றொரு போட்டியில் என்னைச் சேர வைக்க வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

நான் மேலே குறிப்பிட்ட நபர்களோ அல்லது அவர்களுடைய குடும்பங்களோ அவர்கள் பற்றி இங்கே நான் குறிப்பிடுவதை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணுவார்கள் என்று நினைக்கவில்லை. ஆனால், இவைகளெல்லாம் இந்தப் பூமியில் நம் வாழ்க்கை குறுகிய கால அளவைக் கொண்டது என நமக்கு நினைப்பூட்டுகிறது. இன்னும் அவைகளெல்லாம் கிறிஸ்தவம் உண்மை யானது என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் பிரசங்கிக்கிற சத்தியம் சம்மந்தமில்லாமல் இருக்கிறது என்று சிலர் நம்மைப் பார்த்துச் சொல்லக் காரணம், கவர்ச்சியை விரும்புகிற நம் இளைய சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும்படி உயிரோட்டம் உடையதாக அது இல்லை அல்லது இந்த உலகம்

எவைகளை நம்பி நடைமுறைப் படுத்த விரும்புகிறதோ அவை களை உள்ளடக்கிய வெளிப் படைத் தன்மை கொண்டதாக இல்லையென்றும், அதன் மூலம் வாழ்க்கையின் மையக் கருத்தை அது இழந்து விட்டிருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள்.

சத்தியமானது மிகத் துல்லியமாக நம்முடைய தலை முறையினருக்கு சம்மந்தமு டையதாகவே இருக்கிறது. ஏனென்றால், அது மிகச் சுலப மாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், இந்தக் குறுகிய கால வாழ்க்கையை விட்டு நித்தியத் திற்குள் பிரவேசிக்கப் போகிற எல்லா இடங்களிலுமிருக்கிற எல்லா ஆண்களுக்கும், பெண் களுக்கும் பொருந்தக் கூடிய அளவில் தான் இருக்கிறது. சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படி யும் போது அது நமக்கு பரலோ கத்திற்கான பயணச் சீட்டு ஆக இருக்கிறது. பரலோகம் தான் நம் குறிக்கோள், அதை அடை வதற்கு வழி சுவிசேஷம் தான். நுழைவுச் சீட்டு அலங்காரமாக இல்லை என்ற காரணத்திற்காக ஒரு போட்டியைக் காண யார் மறுப்பார்கள்.

நாம் எந்த விசுவாசத்திற் காகப் போராடுகிறோமோ, அந்த விசுவாசம் முதல் நூற்றாண் டில் எப்படி ஒப்புக் கொடுக்கப் பட்டதோ அப்படித்தான் இன்றும் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. அது தொட்டிலிலிருந்து சுடு காடு வரை பயணம் செய்கிற எல்லாருடைய தேவையையும் சந்திக்கிறது: ஒரு வாலிபன், ஒரு வயதான விவசாயி, நூலகக் காப்பாளர், ஓர் இசை அமைப்பாளர், ஒரு கூச்ச சுபாவமுடையவர், எல்லோரி டமும் சகஜமாகப் பழகுபவர், ஒரு கல்லூரித் தலைவர் என்று இப்படி எந்த பிரிவைச் சேர்ந்த வராக ஒருவர் இருந்தாலும் சுவிசேஷம் சரியானதாகவே உள்ளது. இப்பிரிவை சேர்ந்த யாராவது ஒருவர் தங்கள் சூழ் நிலைக்கேற்ப சுவிசேஷத்தை மாற்ற வேண்டுமென்று சொன் னால், அவர்கள் சுவிசேஷத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வில்லையென்றே பொருள். அவருடைய விசேஷித்த தேவைகளுக்கேற்ப சுவிசே ஷத்தை மாற்ற வேண்டும் என விரும்பினால் நம் போதனை யையும், சுவிசேஷ நடைமுறை யையும் மேற்சொல்லபட்ட பிரிவினரில் ஒரு சாராரைப் பிரியப்படுத்த மாற்றினால், அது வேறொரு சாரார் நற்செய்தி யின் உபதேசத்திலிருந்து விலகிச் செல்ல ஏதுவாகி விடும். அத்தோடு, நம்முடைய பயணச் சீட்டை செல்லாததாகவும் ஆக்கிவிடும்.

எல்லோருக்கும் பொருள் படும்படியாக வடிவமைக்கப் பட்ட சுவிசேஷத்தின் தனித் தேவை எல்லோராலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். நம்முடைய அழிந்து போகிற சரீரங்கள் கல்லறையில் வைக்கப்படும் நாளிலே

நம்மெல்லாருக்கும் நம்பிக்கை தேவைப்படுகிறது. நம்மெல்லாருக்கும் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. நாமெல்லாரும் தேவனோடு ஐக்கியத்தை மீட்டமைத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. இந்த சத்தியமானது உங்களுக்கு, மிக எளிமையானதாக இருந்தால், அதை மேற்கொண்டு மாற்றுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறோம். *பரலோகம் செல்வதற்கான ஒரே பயணச் சீட்டு கிறிஸ்துவின் சுவிசேஷந்தான் என்பதை மட்டும் எங்களால் உங்களுக்குக் காட்ட முடியும்.* உங்களுக்கு இன்னும் அழகான பொழுது போக்கு அம்சமுள்ள பயணச் சீட்டு வேண்டுமென்றால், நீங்கள் வேறு எங்காவது தான் பார்க்க வேண்டும், ஆனால், இந்த வாழ்க்கை முடிந்து நித்தியம் காத்திருக்கும் போது அது உங்களை கனப்படுத்துமென்று எந்த நிச்சயத்தையும் எங்களால் அளிக்க முடியாது. ❋

## ஜெபியுங்கள்

1. எதிர்வரும் 2012–ம் ஆண்டு எல்லா நிலையிலும் ஆசீர்வாதமாய் இருக்க
2. கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் ஓங்கி ஒலிக்க
3. உண்மையான சத்தியத்தை அநேகர் மனமுவந்து ஏற்றுக்கொள்ள
4. கள்ள உபதேசங்களை அடையாளம் காணும் நல்ல உள்ளங்களை தேவன் எழும்ப
5. பாரம்பரியமும், மாய்மாலமுமான காரியங்களை கிறிஸ்தவ சமுதாயம் அடையாளம் காண
6. தமிழ் உலகை ஆதாயம் செய்ய வேண்டுமென்ற எங்கள் மன்றாட்டு நிறைவேற



# மகிழ்ச்சி

**Happiness**

*Shan Jackson*

**வி**ன்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக 1940ம் வருடம் மே மாதம் 10ந் தேதி பொறுப்பேற்ற அந்த விழாவில் இந்த வார்த்தைகளைச் சொன்னார்; " எல்லாம் என் தலைவிதியோடு நடக்கிறதாக உணர்கிறேன், என்னுடைய கடந்த கால வாழ்க்கையெல்லாம் இந்நேரத்திற்காகவும், இச்சோதனைக்காகவும் என்னை ஆயத்தம் செய்வதற்காகவே செலவிடப்பட்டிருக்கிறது " என்று. அந்த வாக்கியத்தில் கிறிஸ்தவர்களுக்கு தேவைப்படும் அதிகமான உண்மைகள் அடங்கியிருக்கிறது. நம் வீடு என்றழைக்கப்படுகிற இந்த பூமி நம்முடைய வீடே அல்ல. ஆம், கிரகம் என்றழைக்கப்படுகிற இப்பூமி நம் வீடு அல்ல. இது வெறுமனே ஆயத்தமாவதற்கான ஓர் இடம். ஒரு தற்காலிக குடியிருப்பு. இந்த உலகம் என் வீடல்ல, நான் இதன் வழியாகக் கடந்து செல்கிறேன் அவ்வளவுதான். மேகங்களுக்குப் பின்னால் என் பொக்கிஷங்களெல்லாம் சேர்த்து வைக்கப்படுகிறது. பரலோகத்தின் கதவைத் திறந்து தூதர்கள் என்னைக் கையசைத்து அழைக்கிறார்கள். இந்த உலகமாகிய வீட்டில் இருப்பதாக நான் ஒருபோதும் உணரமாட்டேன்". *"இந்த தேகத்தில் குடியிருக்கையில்*

*கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்* " என்று பவுல் சொல்லியுள்ளார் (II கொரி. 5:7).

சாலொமோன் ஞானியால் எழுதப்பட்ட மிகப் புகழ் வாய்ந்த நீதிமொழிகளில் ஒன்றைக் கொண்டு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். ஞானி " *மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்* " என்றார் (நீதி. 17:22). ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி ஒரு பொதுவான ஒன்றாக இருக்கிறது, அப்படி இருக்க வேண்டும். மகிழ்ச்சி நம் ஒவ்வொருவருக்கும் அனுதின நண்பனைப் போல் இருக்க வேண்டும். சந்தோஷம் " ஒரு நல்ல மருந்து " என்று சாலொமோன் சொல்கிறார். நம் உடலுக்கு எப்படி மருந்து இருக்கிறதோ அப்படித்தான் நம் இதயத்திற்கு சந்தோஷம் இருக்கிறது. இந்த உண்மையை சாலமோன் தேவனிடத்திலிருந்து மட்டுமல்ல, தன் சரீர தகப்பனிடமிருந்தும் கற்றிருக்கக்கூடும். " *துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்* " என்று தாவீது எழுதியுள்ளார்(சங். 1:1,2). இங்கே சங்கீதக்காரன், சந்தோஷம் என்பது தேவனைப் பற்றிய அறிவும், அவருடைய சித்தத் தைப் பற்றிய அறிவுமாகும் என்று சொல்கிறார்.

மற்ற எல்லாவற்றைப்போல, மகிழ்ச்சி மனநிலையைச் சார்ந்திருப்பதாகவே உள்ளது. இயேசு அடிக்கடி மனநிலை குறித்துப் பேசியிருக்கிறார். "*என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்* " என்று. (யோவா 16:33) அதன் பின்பு, " உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் " என்றார். சிலருக்கு சந்தோஷம் என்பது தேடியும் கண்டுபிடிக்க முடியாத ஒன்றாகி விடுகிறது. ஆனால், தேவனுடைய தெய்வீக நோக்கத்தைப் புரிந்து கொள்பவர்களுக்கு அது 1,2,3 போல் சுலபமானது. (1) நாம் சந்தோஷமாயிருக்கவே தேவன் விரும்புகிறார் (2) நாம் சந்தோஷமாயிருப்பதற்கு தேவன் உதவி செய்வார் (3) ஆகவே, நாம் சந்தோஷமாயிருப்போம்.

**சந்தோஷம் என்பது நாம் பகிர்ந்து கொள்ளும் போது மட்டுமே பெருகுகிறதாக இருக்கிறது.**

# பாடம் - 14 குணப்படுதல்

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். தொடர்ந்து இக் கட்டுரையை படித்து வருவதால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாதத்திலும் இக்கட்டுரையின் மூலமாக உங்களை சந்திப்ப தில் மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கட்டுரையின் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை நீங்கள் அடையாளம் கண்டு அதில் பிரவேசிக்க கர்த்தர் வழிநடத்துவாராக!

குணப்படுதல் குணமாக்குதல் என்ற வார்த்தைகள் வேதாக மத்தில் இடம் பெற்றிருக்கிறது. அவை இரண்டு விதமான அர்த்தங்களைக் கொடுக்கிறது. ஒன்று இரட்சிப்புக்கு சம்பந்தப் படுத்தும் மனந்திரும்பிக் குணப்படுதல் (ஏசா. 61:10; அப். 26:20) இன்னொன்று குணமாக்குதல் என்பது வியாதியிலிருந்து குணப்படுதலை பிரபலபடுத்தியிருக்கின்றார்கள். எனவே நாம் சரியான அர்த்தங் கொள்ளும் குணப்படுதலை படிப்போமாக! இதன் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்வோம்!

## I. குணப்படுதல் என்றால் என்ன?

குணப்படுதல் என்றால் ஒரு செயலிலிருந்து வேறொரு செயலுக்கு மாற்றுதல். அதாவது மனதையும், செயலையும் வேறொரு செயலுக்கு மாற்றம் செய்தல். இதுவே மனந்திரும்புதல் என்று அர்த்தப்படுகின்றது. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ. 1:15) என்பது தெளிவு. ஆகவே, அவர் வாயைத் திறந்து முதலில் சொன்ன வார்த்தை மனந்திரும்பு என்கிற வார்த்தை (மத். 4:17). எனவே, குணப்படுதல் என்றால் பாவ வியாதியிலிருந்து மனந்திரும்பு என்பதை வலியுறுத்துகிறது. இதற்கு உதாரணம் பாவியான ஒரு ஸ்திரீ இயேசு பரிசேயன் என்ற போதகனின் வீட்டில் பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்தாள். அவள் இயேசுவின் பாதங் களின் அருகே நின்று அழுது கொண்டு அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தன் தலை மயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து பரிமள தைலத்தைப் பூசினாள். அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டு தனக்குள் முறுமுறுத்தான். இதை அறிந்த இயேசு அவனுக்கு ஒரு உதாரணத் தைச் சொன்னார். ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந் தார்கள். ஒருவன் ஐநூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களால் முடியவில்லை. இருவருக்கும் கடனை மன்னித்து

விட்டான். இந்த இருவரில் யார் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? என்று கேட்டார். அதற்கு அந்த பரிசேயன் எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவன்தான் அதிக அன்பாயிருப்பான் என்று சொன்னான். இயேசு பரிசேயனைப் பார்த்து சரியாய் சொன்னாய் என்று சொல்லி அதுபோல இந்த ஸ்திரீ செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்பு கூர்ந்தாள். (லூக். 7:37-48). இந்த சம்பவத்தில் பாவியான ஸ்திரீ தன் பாவங்களுக்காக துக்கித்து, அழுது மனந்திரும்பி ஆண்டவரிடத்தில் வந்தார் அன்பு கூர்ந்தாள். அவளுடைய மனந்திரும்புதலின் செயலைக் கண்ட ஆண்டவர் அவளுடைய பாவங்களை மன்னித்தார். எனவே, மனந்திரும்புதல் என்றால் மனதையும், செயலையும் மாற்றுதல் என்று பொருள். இதுவே, குணப்படுதல் என்பதாகும். நாம் இரட்சிக்கப்பட மனந்திரும்பிக் குணப்பட வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கின்றது.

## II. குணப்படுதலை தேவன் கட்டளையிட்டிருக்கிறார்

குணமாக்குதலை தேவன் கட்டளையிடவில்லை. இது மற்ற வியாதியர்களை குணப்படுத்தும் அற்புத வரத்தைக் கொண்டது. அற்புத வரங்கள் ஒன்பது இருக்கின்றது (1 கொரி. 12:8-10). இது முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் யார் மீது கைகளை வைக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது (அப். 8:18) இந்த வரங்களை தேவனிடத்திலிருந்து யாரும் நேரிடையாகப் பெறவில்லை என்பது தெளிவு. இந்த ஒன்பது வரங்களின் துணை கொண்டு முதல் நூற்றாண்டில் சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட்டது. அதோடு புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. (எபி. 2:1-4) முதல் நூற்றாண்டு முடிவதற்குள் புதிய ஏற்பாடு முழுவதுமாக எழுதப்பட்டு விட்டது. புதிய ஏற்பாடு முற்றிற்று! அதுவரை அற்புத வரங்கள் இருந்தது நிறைவானது வரும் போது குறைவான இந்த வரங்கள் ஒழிந்து போகும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. (1 கொரி. 13:8-10) இன்று நமக்கு அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள் இருக் கின்றது. அதை கவனித்து படித்துப் பார்ப்பது மிகவும் அவசிய மாயிருக்கிறது (2 பேதுரு 1:19) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வசனத்தைக் கொண்டு நம்மை நியாயந்தீர்ப்பார் (யோவா. 12:48). எனவே, ஒழிந்து போகிற இந்த அற்புத வரங்களை தேவன் கட்டளையிடவில்லை. மாறாக, மனந்திரும்பிக் குணப்படுதலைத் தேவன் கட்டளையிட்டிருக்கின்றார். நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் என்று பேதுரு அப்போஸ்தலன் போதித்தார் (அப். 3:20) நீங்கள் மனந்திரும்பிக் குணப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கித்தார் (அப். 26:20). ஏனென்றால், இது தேவனுடைய கட்டளையாகக் கொடுக்கப்பட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல் கிரேக்க தேசத்திலுள்ள அத்தேனே என்ற பட்டணத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாகச் சென்றார். அந்தப் பட்டணத்தார் நாகரீகத்திலும், படிப்பிலும் பிரசித்திப் பெற்றவர்களாக இருந்தார்கள். ஆயினும்,

அநேக மூட நம்பிக்கைகளை நம்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பல விக்கிரகங்களையும், பல உருவச் சிலைகளையும் மற்றும் அசுத்த ஆவிகளையும் வணங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மத்தியில் பவுல் மெய்யான தேவனைக் குறித்தும், அவரது படைப்புக்களையும், அவரை ஆராதிப்பதும் குறித்து பிரசங்கித்தார். முடிவில் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் என்றான். (அப். 17:30) அதாவது, அவர்கள் விக்கிரக ஆராதனை மற்றும் மூடநம்பிக்கை என்னும் வியாதியில் அகப்பட்டிருக்கிறார்கள். அவைகளிலிருந்து மனந்திரும்பிக் குணமாக வேண்டும் என்று கூறினார் (அப். 26:20).

நாம் இந்த உலகில் நன்மை, தீமை அறிவதற்கு போதுமான காலம் வாழ்ந்துவிட்டோம். அப்போது நாம் சுய நீதியுடையவர்களாகவும், பல மூட நம்பிக்கைகளையுடையவர்களாகவும், விக்கிரக ஆராதனைக்காரராகவும் வாழ்ந்து விட்டோம். ஆனால், இப்போதே மனந்திரும்பிக் குணப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். தேவனுடைய இரக்கத்தினாலே இவ்வாண்டின் இறுதி மாதத்திற்குள் நம்மை வழி நடத்தினார். நாட்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் (எபே. 5:16) தேவ தயவு நாம் குணப்படும்படி ஏவுகின்றது (ரோம 2:4).

நினிவே பட்டணத்து ஜனங்களும் நம்மைப் போலவே விக்கிரக வழிபாடு செய்கின்றவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு தேவன் யோனா என்ற தீர்க்கதரிசி மூலமாக இன்னும் நாற்பது நாளில் நினிவே பட்டணத்திற்கு அழிவு வரும் என்று சொன்னார். உடனே அவர்கள் அரசன் முதற்கொண்டு அனைவரும் மனந்திரும்பினார்கள். அவரவர் தம்,தம் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள் என்று தேவன் கண்டு தாம் அவர்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யவில்லை (யோனா 3:4-10) யோனா என்ற தீர்க்கதரிசி வார்த்தைக்கு அவர்கள் செவிக் கொடுத்தார்கள். யோனாவிலும் பெரியவர் நமக்கு இருக்கின்றார். அவர்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து! எனவே, அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுப்போம் (மத். 12:40) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று புதுவாழ்க்கையை துவக்குவோம். கர்த்தருக்குச் சித்தமானால் புது வருடம் நமக்கு அனுகூலமாயிருக்கும்.

## III. குணப்படுதலின் பலன்

உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் (அப். 3:20). குணப்படுதலின் பலன் நம்முடைய எல்லா பாவங்களும் நிவர்த்தி செய்யப்படுகின்றது, மன்னிக்கப்படுகின்றது. நம் பாவங்கள் நிவர்த்தியாகுமிடம் ஞானஸ்நானம். எனவே, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38).

அநேகர் பாவமன்னிப்புப் பெற்றுக்கொள்ள பல இடங்களுக்கு செல்லுகின்றனர். கோவில், குளம், காசி, இராமேஸ்வரம் என்று அலைகின்றனர். இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கே அலைகின்றார்கள்! முடிவில் வீணான அலைச்சல்கள்தான் மிஞ்சும் பாவமன்னிப்புக் கிடைக்காது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒருவரே அநேகருடைய பாவங்கள் மன்னிக்கும்படி சிலுவையில் இரத்தம் சிந்தினார் (மத். 26:28) அவருடைய ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது (1யோவான் 1:7) அந்த பரிசுத்தமான ரத்தம் ஞானஸ்நானத்தில் நம்முடைய பாவங்களை எல்லாம் கழுவப்படு கின்றது நிவர்த்தி செய்யப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் நாகமான் என்ற சீரிய நாட்டின் படைத் தளபதி பராக்கிரமசாலியும், பெரிய மனுஷனுமாய் இருந்தான். ஆனால், அவனோ குஷ்டரோகியாயிருந்தான் அவன் தீர்க்கதரிசியான எலிசாவிடம் சென்றால் குஷ்ட ரோகம் குணமாகும் என்று அறிந்தான். ஒரு நாள் அவன் தீர்க்கதரிசியான எலிசாவிடம் சென்றால் குஷ்டரோகம் குணமாகும் என்று அறிந்தான். ஒரு நாள் அவன் எலிசாவைத் தேடிச் சென்றான். அவன் எலிசாவினிடத்தில் வருகிறதை எலிசா அறிந்து அப்பொழுது எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய் யோர்தானில் ஏழு தரம் ஸ்நானம் பண்ணு அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு புறப்பட்டுப்போய் அவன் வெளியே வந்து நின்று தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி தன் கையினாலே அந்த இடத்தை தடவி இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று தனக்குள் நினைத்திருந்தேன் என்று அவன் சென்று விட்டான். (2 கொரி. 5:10,11) அவனுடைய கோபம் குணமாகாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த போது அவன் உணர்ந்தான். தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழு தரம் முழுகினபோது அவன் குணமானான் (2 இராஜா 5:14).

அன்பான வாசகர்களே, நாகமானின் சரீர வியாதியை குணமாக்க தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். இன்று நம்முடைய ஆத்தும வியாதியாகிய பாவம் என்ற குஷ்டரோகம் நீங்க வேண்டுமானால் திருமுழுக்காகிய ஞானஸ்நானம் பெற வேண்டும். நாகமான் கோபமாகக் கீழ்ப்படியாமல் சென்று விட்டான். அவன் மேலும் துன்பம் அடைந்தான். அதுபோல நாமும் கோபமடைந்து ஞானஸ்நானம் பெறாமல் இருக்கலாம். மனுஷனுடைய கோபம் தேவ நீதியை நடப்பிக்கமாட்டாது. (யாக். 1:20) எனவே, தேவ நீதிக்குக் கீழ்ப்படிவோம். மனந்திரும்பிக் குணப்படுவோம். அப்போது தேவன் நம் பாவங்களை மன்னித்து பரிசுத்தப்படுத்துவார்.

❋

(தொடரும்)

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| **பொதிகை TV** | சனி | காலை | 5:30 மணி |
| **தமிழன் TV** | ஞாயிறு | இரவு | 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111










( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட


**சத்தியத்தின் குரல்**

என்ற நூல். வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.


- ஆசிரியர்

## கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.










# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.